# ஓமான் சுல்தானகத்தின் தலைவரான மாட்சிமை மிக்க சுல்தான் ஹைதம் பின் தாரிக்கின் இந்தியாவுக்கான அரசுமுறை பயணம் (டிசம்பர் 16, 2023)

டிசம்பர் 10, 2023

ஜனாதிபதியின் திருமதி. திரௌபதி முர்மு அவர்களின் அழைப்பின் பேரில் ஓமான் சுல்தானகத்தின் தலைவர் மாட்சிமை மிக்க சுல்தான் ஹைதம் பின் தாரிக், 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதியன்று அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்கு வருகை தருகிறார். அவருடன் மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவும் வருகிறது. மாட்சிமை மிக்க சுல்தான் ஹைதம் பின் தாரிக்கின் இந்தியாவுக்கான இந்த முதல் அரசுமுறைப் பயணம், இந்தியாவிற்கும் ஓமான் சுல்தானகத்திற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

2. 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதியன்று மாட்சிமை மிக்க சுல்தான் ஹைதம் பின் தாரிக்குக்கு குடியரசுத் தலைவராலும் பிரதமராலும் ராஷ்டிரபதி பவனில் வரவேற்பு அளிக்கப்படும். பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தும் அவருக்கு மரியாதை நிமித்தம் பிரதமர் மதிய விருந்து அளிக்கிறார்.

3. பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடித்தளத்தில் கட்டப்பட்ட நீண்டகால நட்பு, ஒத்துழைப்போடு பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய வலுவான மக்களிடையேயான உறவையும் இந்தியாவும் ஓமானும் பகிர்ந்து கொள்கின்றன, இந்தியாவும் ஓமான் சுல்தானகமும் மூலோபாய கூட்டாளிகள் என்பதோடு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகமும் முதலீட்டு உறவும் பல ஆண்டுகளாக செழித்து வளர்ந்துள்ளது.

4. இந்தியா மற்றும் ஓமான் நாடுகளுக்கு இடையே பிராந்திய ஸ்திரத்தன்மை, முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான எதிர்கால ஒத்துழைப்புக்கான வழிகளை ஆராய இந்த வருகை ஒரு வாய்ப்பாக அமையும்.

**புது தில்லி**
**டிசம்பர் 10, 2023**